# பொறியியலாளர் தில்லைநாதன் சேகரங்களை எண்ணிமப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

தில்லைநாதன் முத்துசாமிப்பிள்ளை அவர்கள் 1965 - 1977 ஆம் ஆண்டு இலங்கைநெடுஞ்சாலைகள் திணைக்களத்தின் கட்டுமான பொறியாளர் (முன்னாள் PWD) தலைமை ஒப்பந்த பொறியாளர் , தொழில்நுட்ப சேவைகள் இயக்குனராகவும் பணியாற்றியுள்ளதோடு தற்போது இலங்கை தேசிய ஒப்பந்ததாரர்கள் சங்கத்தில் (வடக்கு கிளை) ஆலோசனை பொறியாளராக பணியாற்றி வருகிறார்.

இவர் பொறியியல் மற்றும் தொழிநுட்பம் சார் நூல்கள் , ஏனைய துறை சார் ஆவணங்கள் , கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளுக்கு முன்னதாக வெளிவந்த பத்திரிகைகளின் தொகுதி என 20,000 ற்கு மேற்பட்ட 300,000 பக்கங்களை கொண்ட சேகரங்களை பாதுகாத்து வைத்துள்ளார். இவற்றை எண்ணிமப்படுத்தி பாதுகாப்பதன் மூலம் பொறியியல் மற்றும் தொழிநுட்பத்துறை ஆவணங்களுக்கென தனியான ஒரு பெரும் சேகரத்தை உருவாக்க முடியும்.

## செயற்றிட்ட நோக்கம்

தில்லைநாதன் முத்துசாமிப்பிள்ளை அவர்களது தனிப்பட்ட ஆவணங்கள் மற்றும் சேகரங்கள் என்பவை  பொறியியல் மற்றும் தொழிநுட்பம் சார் நூல்கள் உள்ளடங்கக் கூடிய முக்கிய ஆவணங்களாக காணப்படுகின்றன. இவற்றை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல் மிக அவசியமாகும்.

## செயற்றிட்ட அடைவுகள்

இச் செயற்றிட்டத்தினை பூர்த்தி செய்யும் காலவரையானது ஆவணங்களின் பக்க எண்ணிக்கை அடிப்படையை கொண்டு தீர்மானிக்கப்படும் அந்த வகையில் இதனை செய்து முடிக்க இரு எண்ணிமப்படுத்தல் பணியாளர்களுக்கு 24 மாத காலம் எடுக்கும் .

- இக்காலப்பகுதிக்குள்  அவரது தனிப்பட்ட ஆவண சேகரங்கள் என்பவை எண்ணிமப்படுத்தப்பட்டு திறந்த அணுக்கத்திற்கு வழங்கப்படும்.
- ஐயா தில்லைநாதன் அவர்கள் இலங்கையின் உள்நாட்டுப்போர்க் காலத்தில் பொறியியலாளராக பணிபுரிந்தமையால் அவரது சேகரங்களில் போர்க்காலத்தில் இடம்பெற்ற பொறியியல் துறை தொடர்பான அபிவிருத்திகள் சார் ஆவணங்களும் ஆவணப்படுத்தப்படும்.
- நூலக வலைத்தளத்தில் பொறியியல் துறை சார் ஆவணங்களுக்கென தனிமுகப்பொன்று உருவாக்கப்பட்டு ஒரே பார்வையில் ஆய்வாளர்கள் அவர்களது ஆய்விற்கு தேவையான ஆவணங்களை பெற்று பயன்படுத்த முடியும்.
- இரு வருட காலப்பகுதிக்குள் 20,000 ஆவணங்கள் மற்றும் 300,000 பக்கங்கள் உரிய தரத்தில் எண்ணிப்படுத்தப்படுத்தி சரியான முறையில் வகைப்படுத்தப்பட்டு திறந்த அணுக்கத்தில் வழங்கப்படும்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 8,343,500.00**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/16i7ATWZ5w8QIpr5Fh68e49Dfa9nmYmiQrkEOemZLMxw/edit?gid=0#gid=0**